## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.66/2024** **நாள் : 21.09.2024**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மந்தைவெளி ராமகிருஷ்ணா மடம் சாலையில், குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 24.09.2024 அன்று காலை 09.00 மணி முதல் 26.09.2024 அன்று காலை 4.00 மணி வரை (43 மணி நேரம்)
மண்டலம் 9 – க்குட்பட்ட சில பகுதிகள் மற்றும் மண்டலம் 13 – க்குட்பட்ட ராஜா அண்ணாமலைபுரம் பகுதிக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மந்தைவெளி ராமகிருஷ்ணா மடம் சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் **24.09.2024 அன்று காலை 09.00 மணி முதல் 26.09.2024 அன்று காலை 4.00 மணி வரை (43 மணி நேரம்)** MRC நகர் குடிநீர் பகிர்மான நிலையத்தின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால் மண்டலம் 9 (தேனாம்பேட்டை) மற்றும் மண்டலம் 13 (அடையாறு) – க்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| **மண்டலம்** | **பகுதிகள்** |
|---|---|
| மண்டலம் –9 (தேனாம்பேட்டை) | திருவல்லிகேணி, இராயப்பேட்டை, மயிலாப்பூர், நந்தனம், அபிராமபுரம் (பகுதி), மந்தைவெளி |
| மண்டலம் –13 (அடையாறு) | ராஜா அண்ணாமலைபுரம் |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும்

அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044–4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in